# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2473 - 2026 අප්‍රේල් 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.04.02**

2473 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 700 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**ஆர். ஏ. பீ. கே. ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82780 - 5403 (2026/04)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் - ஊவா மாகாண சபை**

**விவசாயப் பயிற்சி பாடநெறி துறைசார் உதவியாளர் (விவசாயம்)**
**தேசிய தொழில் தகைமை (NVQ 4, பயிற்சி பாடநெறி - கல்வி ஆண்டு 2026**

01. மேற்குறிப்பிட்ட பயிற்சி பாடநெறிக்காக மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப்பாடநெறியானது ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள பிபிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

02. சிங்கள மொழி மூலம் நடைபெறும் ஒரு வருட பயிற்சி பாடநெறியானது 06 மாத காலம் எழுத்து செயன்முறை ரீதியானதாகவும் அத்துடன் மேலும் 06 மாத காலம் ஊவா மாகாணத்தினுள் தொழில்சார் பயிற்சியையும் உள்ளடக்கியதாகும். பாடநெறியினை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் மற்றும் மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப் படுகின்ற NVQ LEVEL 4 சான்றிதழும் வழங்கப்படும்.

03. பாடநெறியானது விவசாயத்தினை வியாபார நோக்காக அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது. தேசிய தொழிற்தகைமை 5 மட்டத்திற்குரிய பாடநெறியினை மற்றும் உயர்வானதை பயிலுவதற்கு இப் பாடநெறி ஆரம்ப தேசிய தொழிற் தகைமை 4 அடிப்படையாக அமைகின்றது.

04. துறைசார் உதவியாளர் (விவசாயம்) தேசிய தொழிற்றகைமை (NVQ 4) பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு

M - 01 விவசாயத்தின் அடிப்படைகள் (Fundamentals of Agriculture)

M - 02 நெல் மற்றும் பிற தானியப் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் (Establishment and Maintenance of Paddy and Other Cereals)

M - 03 மறு வயற் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் (Establishment and Maintenance of Other field Crops - OFC)

M - 04 பூங்கனியியல் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் (Establishment and Maintenance of Horticultural Crops)

M - 05 அறுவடை செய்தல் மற்றும் ஆரம்ப பதப்படுத்தல் (Harvesting and Primary Processing)

M - 06 பண்ணை இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு (Maintenance of Farm Machineries, Equipment and Tools)

M - 07 விவசாய விரிவாக்கத் திட்டத்தை அமுல்படுத்தல் (Implementation of Agricultural Extension Programme)

M - 08 பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன் (Communication Skills for Workplace)

M - 09 மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல் திறன் (Language Literacy and Numeracy)

M - 10 குழு செயற்பாடுகள் (Team work)

M - 11 தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் (Occupational Health and Safety Procedures and Practice)

05. 2026 வருடத்திற்கான முதலாவது குழுவினர் ஏப்பிறல் மாத இறுதி வாரத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர் 8" x 12" அங்குல (A4) அளவிலான கடதாசியில் அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து இங்கு கீழே காணப்படும் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2026.04.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். உங்கள் விண்ணப்பத்தை பதிவு தபால் மூலம் அனுப்பும் போது, விண்ணப்பப்படிவம் இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "துறைசார்

உதவியாளர் (விவசாயம்) NVQ 4 மட்ட பயிற்சி பாடநெறி விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பபட வேண்டும். 2026 1" என்று எழுதி அனுப்ப வேண்டும் ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

06. விண்ணப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி "ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர், ஊவா மாகாண விவசாயத் திணைக்களம், ரத்வத்தை மாவத்தை, பதுளை".

07. கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்ப படிவங்களுக்கு ஏற்ப போட்டி பரீட்சை நடாத்துதல் அல்லது நேர்முக பரீட்சை மேற்கொள்ளல் மூலம் பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களில் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு எண்ணிக்கையின் இருமடங்கான விண்ணப்பதாரர்கள் தகுதி பரீட்சிப்பு நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உயர் தகுதி கொண்ட விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். போட்டி பரீட்சை நடாத்துதல் அல்லது நேர்முக பரீட்சை மேற்கொள்ளல் தினம் தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். மேலும் ஊவா மாகாண சபை இணைய தளத்தில் இது தொடர்பாக அறிந்து கொள்ள முடியும்.

08. இப் பயிற்சி பாடநெறி தொடர்பாக மேலதிக தகவல்களை 055 2265423 தொலைபேசி மூலம் பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலைய முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

09. **பயிற்சி நெறிக்கு விண்ணபிப்பதற்கான தகைமைகள் :**

09.1 கல்வித் தகைமைகள் - கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் (சா. த.) இரண்டு 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

09.2 பிற தகைமைகள்

I. எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் 18 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

II. நிரந்தர வதிவிடத்ததை உறுதிபடுத்த பிரதேசத்திற்குரிய கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழில் சமர்பிக்கப்பட வேண்டும்.

10. பயிற்சி பாட நெறிக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு

1. பிபிலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பயிற்சி நடைபெறும் முதல் 06 மாத காலப் பகுதியில் பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா ஆயிரம் (ரூபா 1000.00) பயிற்சி நெறி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படும். தொழில்சார் பயிற்சி 6 மாத காலப் பகுதியில் ஊவா மகாண விவசாயத் திணைக்களத்தினால் கொடுப்பனவு செலுத்தப்பட மாட்டாது

11. **வேறு விடயங்கள் :**

1. இப் பாடநெறிக்கு 25 மாணவர்கள் உள் வாங்கப்படுவார்கள்

II. பயிற்சியாளர்களும் பயிற்சியின் முடிவில் திரும்ப செலுத்தப்படும் பாதுகாப்பு வைப்பு தொகையாக ஆயிரம் ரூபா (ரூபா 1,000.00) வைப்புச் செய்யப்பட வேண்டும். பயிற்சி நெறியை பூரணப்படுத்தாவிடின் வைப்பு தொகை திரும்ப செலுத்தப்படமாட்டாது.

III. உளவா மாகாண விவசாயத் திணைக்களத்திலால் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பாணங்கள் வழங்கப்படமாட்டாது.

IV. பயிற்சியின் பின்னர் வேலை ஒன்றை வழங்க ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் உட்பட்டிருக்கவில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது.

V. பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் மாணவ அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்

12. நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

I. வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் சான்றிதழ்

II. நன்மதிப்பைப் பெற்ற இரண்டு சான்றிதழ்கள், அவற்றில் ஒன்று நிறைவேற்று தர அரசாங்க உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

III. நேர் முகப் பரீட்சையின் போது தேசிய ஆளடையாள அட்டை கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவு செய்தலின் போது நகல் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

13. விண்ணப்பதாரர் பிரயோக விவசாயத்தில் ஈடுபடுவதற்கு. அவர் உடல் நலத்துடன் இருப்பதாகச் சான்றளிக்க அரசாங்க மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் பதிவு செய்தலின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எச். எஸ். பி. ஜயலத்,
செயலாளர்,
ஊவா மாகாண விவசாய அத்தியட்சகர்,
ரத்வத்த மாவத்தை,
பதுளை.

(மாதிரி விண்ணப்பப்படிவம்)

**2022 ஆம் ஆண்டிறகான மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையில் (சிவில்) விசேட தரத்திற்கு சேவை விவசாயப் பயிற்சி பாடநெறி துறைசார் உதவியாளர் (விவசாயம்) தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறி - 2026 அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் பதவியுயர்த்தல்**

01. I. முழுப் பெயர் : ..........................................................................
(சிங்களத்தில்)

II. முழுப் பெயர் : ..........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

III. முதலெழுத்துடன் பெயர் : ..........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

02. பெண்/ ஆண் : ..........................................................................

03. I. நிரந்தர முகவரி : ..........................................................................
(சிங்களத்தில்)

II. நிரந்தர முகவரி : ..........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

III. தொலைபேசி இல. : இல்லம் .................................................... கையடக்க : ....................................................

IV. மின்னஞ்சல் முகவரி : ..........................................................................
(செயற்பாட்டில் உள்ளவை)

V. WhatsApp இல. : ..........................................................................

04. (i) பிறந்த திகதி : ..........................................................................

(ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்திற்கு வயது :

வருடம் .............................. மாதம் .............................. திகதி ..............................

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................................

06. வசிப்பிடம் தொடர்பான தகவல்

i. வசிப்பு மாவட்டம் : ..........................................................................................................................................

ii. பிரதேச செயலகப் பிரிவு : .................................................................................................................................

iii. கிராம அலுவலகப் பிரிவு : ..................................................................................................................................

iv. ஊவா மாகாணத்தில் வசிக்கும் காலம் : ........................................................................................................

07. கல்வித் தகைமை

i. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை : ..............................................................................................

வருடம் : ................ பரீட்சை சுட்டெண் : ................

| *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

வருடம் : ................ பரீட்சை சுட்டெண் : ................

| *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ii. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சை : .......................................................................................................

வருடம் : ................ பரீட்சை சுட்டெண் : ................

| *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

வருடம் : ................ பரீட்சை சுட்டெண் : ................

| *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

iii. பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும் : ..........................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

8. அவசர சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட வேண்டிய நபர்கள்

i. பெயர் : ..............................................................................................................................................................

ii. விண்ணப்பதாரருக்கான உறவு : ..........................................................................................................................

iii. முகவரி : ............................................................................................................................................................

iv தொலைபேசி இல. : கையடக்க ........................................................ இல்லம் : ............................................................

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவதொரு தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் அதற்காக விதிக்கப்பட்ட தொகையினை செலுத்துவதற்கு இணங்குகின்றேன் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி : ............................................. ..................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

04 - 103

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

01. மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கீழ்வரும் பதவிகளுக்காக மேல் மாகாணத்தில் தொடர்ச்சியான மூன்று வருட கால (03) வதிவினைக் கொண்ட கீழ்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த திறந்த ஆட்சேர்ப்புப் பரீட்சை மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

I. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III
II. மேல் மாகாண சபை அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (ஒரு வருட பயிற்சிக் காலம்)
III. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

**02. பொது தகைமைகள்**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்
II. சிறந்த நடத்தை உடையவராக இருத்தல்
III. ஏதேனும் மதப்பிரிவின் மதகுருவாக உள்ள நபர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை அற்றவர் ஆவர்.
IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான மூன்று 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும்.
V. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த உரிய வயது எல்லைக்குட்பட்ட அலுவலர்கள் மட்டுமே சேவையில் இணைத்துக் கொள்வதற்குறிய எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.
VI. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தமது கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள தகைமைகளை உடையவராக காணப்பட வேண்டும்.

**03. வயதெல்லை :-**

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித்திகதிக்கு அதாவது 2026.05.10 ஆம் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் அவசியம்.

**04. சேவை நிபந்தனைகள்**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையின் நியமனங்களில் அதிகாரம் செலுத்தும் நிபந்தனைகளுக்கும் 2020.06.24 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் 2364/32 ஆம் இலக்க 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்படவேண்டும்.

(இ) இப்பதவி மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டதாகும். தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்குள் (03) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைய பரிந்துரைக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**05. வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 170**

**06. வெற்றிடங்கள் நிலவும் துறைகள் :-**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான இறுதி தீர்மானம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

6.1 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.05.10 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளும் 2026.05.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

**07. மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பித்தல் :-**

இப்போட்டிப் பரீட்சை மூலமாக பூர்த்தி செய்யப்படவுள்ள வெற்றிடங்களின் 3% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பரீட்சையில் தகைமை பெறும் மாற்றுத் திறனாளிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 3% மாற்றுத்திறனாளிகள் தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். இதற்கான தகுதி பெறுவதன் பொருட்டு பரீட்சையில் ஒவ்வொரு விடயத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது புள்ளிகளை (40%) விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டும். மாற்றுத்திறனாளி அடிப்படையிலான ஆட்சேர்ப்பிற்கு 27/88 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தின் நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் தகைமைகளைப் பரீட்சிக்கும் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் போது மருத்துவச் சான்றிதழ்களை (அங்கவீனம் தொடர்பாக உறுதிப்படுத்த) சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு, மாற்றுத்திறனாளி அல்ல எனவோ மாற்றுத்திறன் அடிப்படையில் நியமனம் பெற தகைமை அற்றவர் எனவோ பரிந்துரைக்கப்படும் விண்ணப்பதாரிகள் நியமனம் பெற தகைமை அற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*குறிப்பு* - நிகழ்நிலை ஊடாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உரியவாறு தாம் மாற்றுத்திறனாளிகளுக்கான நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிட வேண்டும் என்பதோடு. அவ்வாறல்லாத ஒருவர் தவறாக மாற்றுத்திறனாளி எனக் குறிப்பிடக் கூடாது.

மாற்றுத்திறனுடைய நபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்த வெற்றிடங்கள் பொதுவான விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

## 08. ஆட்சேர்ப்பு முறை

- எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகளின் மொத்தப்புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய தினத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பாக எவ்விதத்திலும் மீள கருத்திற் கொள்ளப்படாது. மேலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதன் பின்னர் முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

- உரிய திணைக்களம்/ அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள சதவிகிதத்திற்கு போதுமான அடிப்படைத் தகைமைகளுடன் கூடிய உள்வாரியான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து மட்டும் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

- பயிற்சி காலத்தின் முடிவில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்
- 

(அ) திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் பயிற்சி தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ஆ) பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மிகாது தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில் மீண்டும் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த அடிப்படையில் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை இடை நிறுத்தப்படும்.

## 09. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-

- தரம் III MN 03 – 2025
  ரூ. 52,250 - 10 X 800 - 11X 1,190- 10 X 1,320 -10X1,350 ரூபா 100,040.00
  (பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை III இன்படி கொடுப்பனவு செய்யப்படும்)

- பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) - 2026.01.01 ஆந் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு 43,274.00
- பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) - 2026.01.01 ஆந் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு 43,730.00
  (மாதாந்த கொடுப்பனவு பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை VI இன்படி கொடுப்பனவு செய்யப்படும்.

10. அடிப்படைத் தகைமைகள் :-

| பதவி | தகைமைகள் |
|---|---|
| மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (சிவில்)<br>➢ தரம் III | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப் பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>1. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப ( சிவில் ) டிப்ளோமா.<br>அல்லது<br>2. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>4.இலங்கை திறந்த பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>5. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்<br>அல்லது<br>6. தொழிற் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் கல்வித் தகைமை (NVQ) 06 வது நிலைக்குறிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| ➢ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br><br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகியவற்றில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br><br>1.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் 03 வருட கற்கை நெறியினை கற்று தேசிய தொழில்நுட்ப (சிவில்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>2.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான 02 வருட தேசிய சான்றிதழ் கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>3.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| ➢ பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல். பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகியவற்றில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>மற்றும்<br><br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

குறிப்பு

i) தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii) தரம் III இற்கு தகைமை உடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாத போது, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சி தரத்திற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி வழங்கும் தரத்திற்கு சேர்க்கப்படுவர்.

iii) பயிற்சி தரம் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட பயிற்சிக் கால முடிவில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தரம் III இற்கு நியமிக்கும் போது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

**11. எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரம்**

❖ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சி) மற்றும் தரம் III இற்காக

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| **தொழில்நுட்பத் திறன்**<br>கட்டடம், வீதிகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டுமான அடிப்படைகள் நிர்மாணப் பணிகளுக்கான வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் வாசித்து அறியும் ஆற்றல். மதிப்பீடுகள் தயாரிக்கும் ஆற்றல், நீர்வழங்கல், நீர்வழித்தட செயற்பாடுகள் மற்றும் கழிவகற்றல் நடைமுறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிக்கு உள்ள ஆற்றல்கள் தொடர்பான விண்ணப்பதாரிகளின் திறன்களை மதிப்பிடுவதற்கான வினாக்களை உள்ளடக்கியது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

❖ **பயிற்சியளித்தல் (இரண்டு வருட பயிற்சிக்காக)**

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 02 மணித்தியாலம் | 100 | 40% |

**12. பரீட்சைப் பெறுபேறுகள் :**

மேல் மகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் www.psc.wp.gov.lk எனும் வலைத்தளத்தில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

**13. பொதுவான நேர்முகப் பரீட்சை :**

அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள் – அடிப்படை தகைமைகளை பரீட்சிக்கும் பொருட்டு மற்றும் உடற்தகுதி தொடர்பாக பரீட்சிக்கும் பொருட்டு நடத்தப்படும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

நியமிக்கும் அதிகாரி - மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

**14. பரீட்சைக் கட்டணம் :**

1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சைக்கான கட்டணமாக ரூ. 1200.00 ஐ மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20 - 03 - 02 - 99 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட (மே.மா1) பற்றுச் சீட்டினை

விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணமானது முத்திரை அல்லது காசுக்கட்டளையாக ஏற்கப்படாது.

**15. விண்ணப்பிக்கும் முறை :**

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து விண்ணப்பம்கோரும் அறிவித்தலின் படி எமது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள (Upload) விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம்.

II. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படை தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

III. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்-
விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள அலுவலகர்களின் ஒப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், பிரதேசத்தின் கிராம சேவகர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி தரத்தின் அலுவலர் அல்லது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலகர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, ஏனைய மதங்களைச் சார்ந்த மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

IV. நிகழ் நிலை ஊடாக விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் திகதி – 2026.05.10

V. எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து நிகழ் நிலை ஊடாக 2026.05.10 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்.
மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
(ஆட்சேர்ப்புப் பிரிவு)
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்
நாவல வீதி,
ராஜகிரிய.

- விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 " என கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

VI. தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்கவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

VII. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது.

VIII. இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். இந்த ஆட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/ செய்யாதிருத்தல் தொடர்பாக இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

IX. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணப்பத்தினை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பத்தாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

**16. பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ)பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை இடம்பெறும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணபதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

*குறிப்பு*– அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருத்தலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராக கருதுவதாக அமையாது.

**17. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**

பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை விண்ணப்பதாரர் தமது ஆடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத வகையிலும் மற்றும் இலத்திரணியல் தொடர்பு சாதனங்களை அணியாமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும் போது காதுகளை மறைக்காத வகையில் உடையணிந்து பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை ஆரம்பித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

**18. தவறான தகவல்கள் வழங்குதல் :-**

விண்ணப்பதாரி ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு தகைமை அற்றவர் என அறியக் கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். மேலும் எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என அறியுமிடத்து அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

i. விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் தகைமையற்ற / பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அறியக்கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பதாரியால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவரால் சரியான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளமை பிற்காலத்தில் வெளிப்படுத்தப்படுமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு, இப்பரீட்சையின் மூலமாக வழங்கப்பட்ட நியமனம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் அவர் மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் உட்பட்டவராவார்.

19. பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் உட்பட்டவர்களாவர். குறித்த விதிகளை மீறுமிடத்து அவர்கள் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்.

20. இப்ரீட்சையினை நடத்துதல், பரீட்சையினை இரத்துச் செய்தல் பிற்போடுதல், அல்லது பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இவ்விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பான பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்பட இணங்கியுள்ளனர்.

21. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

தொலைபேசி - 011 2879614
தொலைநகல் - 011 2879512
மின்னஞ்சல் - ppscwprec@sltnet.lk

மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய.
2026, மாச்சு 27.

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் உள்ள எந்தவொரு விடயத்திற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு பொறுப்பேற்காது)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026**

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

அறிவித்தலின் இலக்கம் 1 இற்கமைய விண்ணப்பிக்கும் பதவிக்குறிய தரம் (உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதுக)

தரம் III - I

பயிற்சி தரம் (ஒரு வருடம்) - II [ ] (தரத்தினை பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது)

பயிற்சி தரம் (இரண்டு வருடம்) - III

- அங்கவீனமுற்றவரா? [ ] (ஆம் எனில் ✓ அடையாளமிடுக)
- பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய எழுத்தினை கூட்டில் எழுதுக)

சிங்களம் - S
தமிழ் - T [ ]
ஆங்கிலம் - E

01 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) [ ]
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(உதா: H.M.S.K. GUNAWARDHANA)
[ ]

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) - [ ]

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்- [ ]

02 2.1 ஆண்/பெண் - [ ]

03 3.1 விவாகமானவர்/ விவாகமாகாதவர் - [ ]

3.2 பிறந்த திகதி - வருடம் [ ] மாதம் [ ] திகதி [ ]

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.05.10 ஆம் திகதிக்கு வயது

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] திகதி [ ]

**04** 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) [ ]

நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) [ ]

4.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

i. சிங்களம்/தமிழில் - [ ]

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் - [ ]

4.3 பிரதேச செயலாளர் பிரிவு:

4.4 மேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக வசிக்கும் காலம்:

4.5 மின்னஞ்சல் முகவரி :

4.6 தொலைபேசி இலக்கம் :

நிலையான

கைத்தொலைபேசி:

❖ பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் மேற்படி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS முறை ஊடாக அனுப்பப்படும் என்பதால் பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுக. SMS செய்திகள் கிடைக்காமை தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் புகார்கள் பரிசீலிக்கப்படாது.

**05**. **கல்வித் தகைமைகள் -**

**5.1** கல்விப் பொது தராதர. (சாதாரண தர) பெறுபேறு விபரம்:

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் : | முதல் சந்தர்ப்பம் | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**5.2** கல்விப் பொது தராதர (உயர் தர) பெறுபேறுகள் :

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |

5.3 பரீட்சை அறிவித்தலில் 10 ஆம் பந்திக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள தொழிற்றகைமைகள் தொடர்பான பயிற்சிநெறி / தகைமை தொடர்பான விபரங்கள்:

I. பல்கலைக்கழகம் / நிறுவனம்: ☐

II. பாடநெறியின்பெயர் : ☐

III. காலம் : ☐

IV. பாடநெறியை பூர்த்திசெய்த தினம் : ☐

V. ஏனைய தகைமைகள் : ☐

மேற்படி தகைமைளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்/ ஆவணங்களை இணைக்கவும்)

**06.** நீங்கள் எப்பொழுதேனும் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ☐

**6.1** மேற்படி பதில் “ஆம்” எனில் விபரங்களைக் குறிப்பிடுக **:** ...........................................................................................
.............................................................................................................................................................................

**07.** பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் : ..........................................................................................
.............................................................................................................................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் : .......................................................

திகதி : .......................................................

பற்றுச்சீட்டை UPLOAD செய்க

| | |
|---|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் | பற்றுச்சீட்டை upload செய்யக் கூடியவாறு தயாரிக்க |

(பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்ற மே.மா ١ மட்டும் செல்லுபடியாகும்.)

**08.** விண்ணப்பதாரியின் உறுதியுரை

………………………………………………………………………………………………………………………………………
……………………………………………… ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன். நான் வழங்கிய தகவல்கள் தவறானவை /பிழையானவை என தெரியவருமிடத்து மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சி (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எனது உரிமை புறக்கணிக்கப்படும் என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட நேரிடும் என்பதையும் அறிவேன். மேலும் நேர்முகப் பரீட்சை நடத்துதல் தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் என்பதையும் அறியத் தருகிறேன்

திகதி ........................................ ........................................
விண்ணப்பதாரியின் கைஒப்பம்

**09.** விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி......................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் அவர் /அவள் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தினார் எனவும் உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்..................................திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

............................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்
மற்றும் பதவி முத்திரை

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்................................................................
பதவி................ .........................................................................................
முகவரி .........................................................................................................
திகதி...........................................................................................................

10. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலராயின் நிறுவனத் தலைவரின் அத்தாட்சி (அவசியமாயின் மட்டும் குறிப்பிடுக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................... இவ்வலுவலகத்தில்/ நிறுவனத்தில் .............................. திகதி முதல் இற்றை வரை .................................................. (பதவி) நிரந்தர /தற்காலிக/ அமைய (அவசியமற்ற சொற்களை கீறிவிடுக) பதவியில் கடமையாற்றும் அவரது சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்கு அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..............................................................
திணைக்களத் தலைவரின் ஒப்பம்
மற்றும் பதவி முத்திரை

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்.................................................................
பதவி .........................................................................................................
முகவரி .........................................................................................................
திகதி.........................................................................................................

04 - 32/1

---

மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பயிற்சி (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்காக மேல் மாகாணத்தில் தொடர்ச்சியான மூன்று வருட கால (03) வதிவினைக் கொண்ட கீழ்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த திறந்த ஆட்சேர்ப்புப் பரீட்சை மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

I. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III
II. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) (ஒரு வருட பயிற்சிக் காலம்)_
III. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

**02. பொது தகைமைகள் :**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. சிறந்த நடத்தை உடையவராக இருத்தல்.
iii. ஏதேனும் மதப்பிரிவின் மதகுருவாக உள்ள நபர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை அற்றவர் ஆவர்.
iv. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான மூன்று (03) வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும்.
v. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த உரிய வயது எல்லைக்குட்பட்ட அலுவலர்கள் மட்டுமே சேவையில் இணைத்துக் கொள்வதற்குறிய எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.
vi. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தமது கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள தகைமைகளை உடையவராக காணப்பட வேண்டும்.

**03. வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அதாவது 2026.05.10 ஆம் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் அவசியம்.

04. **சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையின் நியமனங்களில் அதிகாரம் செலுத்தும் நிபந்தனைகளுக்கும் 2019.08.15 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியர்வுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் 2364/32 ஆம் இலக்க 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட வேண்டும்.

(இ) இப்பதவி மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டதாகும். தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்குள் (03) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைய பரிந்துரைக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

05. வெற்றிடங்களின் எண்ணிக்கை :- **20**

06. வெற்றிடங்கள் நிலவும் துறைகள்:-

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான இறுதி தீர்மானம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

6.1 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.05.10 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளும் 2026.05.10 திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு முறை**

- ➢ எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- ➢ எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய தினத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பாக எவ்விதத்திலும் மீள கருத்திற் கொள்ளப்படாது. மேலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதன் பின்னர் முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

- ➢ ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

- ➢ உரிய திணைக்களம்/ அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள சதவிகிதத்திற்கு போதுமான அடிப்படைத் தகைமைகளுடன் கூடிய உள்வாரியான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து மட்டும் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

- பயிற்சி காலத்தின் முடிவில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

(அ) திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் பயிற்சி தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ஆ) பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மிகாது தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில் மீண்டும் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த அடிப்படையில் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை இடை நிறுத்தப்படும்.

**08. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

- தரம் III MN 03 – 2025
  ரூ . 52,250 - 10 X 800 - 11X 1,190- 10 X 1,320 -10X1,350 - ரூபா 100,040.00
  (பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை III இன்படி கொடுப்பனவு செய்யப்படும்)

- பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) - 2026.01.01 திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு ரூ. 43,274.00
- பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்)-2026.01.01 திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு ரூ 43,730.00

(மாதாந்த கொடுப்பனவு பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை VI இன்படி கொடுப்பனவு செய்யப்படும்.)

**09. அடிப்படைத் தகைமைகள் :-**

| பதவி | தகைமைகள் |
|---|---|
| மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (மின்)<br>➢ தரம் III | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப் பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>மற்றும்<br><br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழில் தகைமைகள்**<br>1. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (மின்) டிப்ளோமா<br><br>அல்லது<br><br>2. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்)<br><br>அல்லது |

| | |
|---|---|
| ➢ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | 3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>4.இலங்கை திறந்த பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>5.இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.<br>அல்லது<br>6. தொழிற் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் கல்வித் தகைமை (NVQ) 06 ஆவது நிலைக்குறிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br><br>**(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழிநுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>மற்றும்<br><br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழில் தகைமைகள்**<br>1.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் மின் துறையில் 03 வருட கற்கை நெறியினை கற்று தேசிய தொழில்நுட்ப (மின்) சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>2.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் மின் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான 02 வருட தேசிய சான்றிதழ் கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்<br><br>அல்லது<br>3.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| ➢ பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | (அ) கல்வித் தகைமைகள்<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகியவற்றில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br>மற்றும்<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

*குறிப்பு*

i) தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii) தரம் III இற்கு தகைமை உடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாத போது, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சி தரத்திற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி வழங்கும் தரத்திற்கு சேர்க்கப்படுவர்.

iii) பயிற்சி தரம் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட பயிற்சிக் கால முடிவில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தரம் III இற்கு நியமிக்கும் போது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

**10. எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரம்**

❖ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சி) மற்றும் தரம் III இற்காக

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>அபேட்சகரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள், முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| **தொழில்நுட்பத் திறன்**<br>*மின் தடையிகள், *மின்தேக்கிகள், *டையோடுகள் தொடர்பான கோட்பாடுகள் மின்னியல் மற்றும் மின்காந்த கோட்பாடுகள் மின் காந்தப் புலங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின் விருத்தி, எளிய கடத்தி அமைப்புகள் மின்தேக்கத் திறன் மற்றும் மின் தூண்டல், மின்காந்த மாதிரிகளில் தூண்டப்பட்ட மின்னியக்க விசை ஒற்றை மின் மாற்றிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் சுற்று மற்றும் திசையன் வரைபடங்கள், எளிய மின்னோட்டத் தொடர்கள், கூட்டு மின் பிறப்பாக்கிகள் மற்றும் மோட்டார்களின் அடிப்படை இயக்கப் பண்புகள், ஆர்மேச்சர் எதிர் விளைவுகள் மற்றும் மின் கசிவு எதிர் விளைவு, மோட்டாரைத் தொடங்கும் கோட்பாடுகள் இணைச்செயற்பாட்டு மின்மாற்றிகள் மற்றும் மின்னாக்கி பின்னூட்ட ஒத்திசைவு ஆகியவை இதில் அடங்கும். | 03 மணித்தியாலம் | 100 | 40% |

| | | | |
|---|---|---|---|
| *மின்னிணைப்பு வழங்குதல் (ஒற்றைக் கட்டம் மற்றும் மூன்று கட்டம்)<br>*மின் கட்டமைப்பின் பாதுகாப்பு முறைகள்<br>*செயல் திறன் மற்றும் ஆற்றல் செயல் திறன் பற்றிய விடயங்களைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியது | | | |

❖ **பயிற்சியளித்தல் (இரண்டு வருட பயிற்சிக்காக)**

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br><br>அபேட்சகரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 02 மணித்தியாலம் | 100 | 40% |

**11. *பரீட்சைப் பெறுபேறுகள் :***

மேல் மகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் www.psc.wp.gov.lk எனும் வலைத்தளத்தில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

**12. பொதுவான நேர்முகப் பரீட்சை :**
அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள் – அடிப்படை தகைமைகளை பரீட்சிக்கும் பொருட்டு மற்றும் உடற்தகுதி தொடர்பாக பரீட்சிக்கும் பொருட்டு நடத்தப்படும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

நியமிக்கும் அதிகாரி -மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

**13. *பரீட்சைக் கட்டணம் :***
அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சைக்கான கட்டணமாக ரூ 1200.00 ஐ மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட (மே.மா1) பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணமானது முத்திரை அல்லது காசுக்கட்டளையாக ஏற்கப்படாது.

**14. விண்ணப்பிக்கும் முறை :-**

I. அனைத்து விண்ணப்பத்தாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து விண்ணப்பம்கோரும் அறிவித்தலின் படி எமது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள (Upload) விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம்.

II. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படை தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

III. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்-
விண்ணபத்தில் விண்ணபத்தாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள அலுவலகர்களின் ஒப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின்

அதிபர், பிரதேசத்தின் கிராம சேவகர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி தரத்தின் அலுவலர் அல்லது அரசாங்க மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலகர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, ஏனைய மதங்களைச் சார்ந்த மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

IV. நிகழ் நிலை ஊடாக விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் திகதி – 2026.05.10

V. எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து நிகழ் நிலை ஊடாக 2026.05.10 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்.
மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
(ஆட்சேர்ப்புப் பிரிவு)
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்
நாவல வீதி,
ராஜகிரிய.

- விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பயிற்சி (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 ” என கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

VI. தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்கவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

VII. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது.

VIII. இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். இந்த ஆட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/ செய்யாதிருத்தல் தொடர்பாக இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

IX. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணபத்தினை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பத்தாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

**15. பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை இடம்பெறும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
*குறிப்பு* – விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருத்தலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராக கருதுவதாக அமையாது.

**16. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**

பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத வகையிலும் மற்றும் மின் தொடர்பு சாதனங்களை அணியாமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும் போது காதுகளை மறைக்காத வகையில் உடையணிந்து பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை ஆரம்பித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

**17. தவறான தகவல்கள் சமர்ப்பித்தல் :**

விண்ணப்பதாரி ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு தகைமை அற்றவர் என அறியக் கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். மேலும் எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என அறியுமிடத்து அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

i. விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் தகைமையற்ற / பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அறியக்கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பதாரியால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவரால் சரியான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளமை பிற்காலத்தில் வெளிப்படுத்தப்படுமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு, இப்பரீட்சையின் மூலமாக வழங்கப்பட்ட நியமனம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் அவர் மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் உட்பட்டவராவார்.

18. பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் உட்பட்டவர்களாவர். குறித்த விதிகளை மீறுமிடத்து அவர்கள் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்.

19. இப்பரீட்சையினை நடத்துதல், பரீட்சையினை இரத்துச் செய்தல், பிற்போடுதல் அல்லது பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இவ்விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பான பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்பட இணங்கியுள்ளனர்.

20. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்,

திலக் செனரத்.
செயலாளர்.
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு
மேல் மாகாணம்

தொலைபேசி - 011 2879614
தொலைநகல் - 011 2879512
மின்னஞ்சல் - ppscwprec@sltnet.lk

மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய.
2026, மார்ச்சு 27.

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் உள்ள எந்தவொரு விடயத்திற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு பொறுப்பேற்காது)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026**

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

அறிவித்தலின் இலக்கம் 1 இற்கமைய விண்ணப்பிக்கும் பதவிக்குரிய தரம் (உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதுக)

தரம் III - I

பயிற்சி தரம் (ஒரு வருடம்) - II [ ] (தரத்தினை பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது)

பயிற்சி தரம் (இரண்டு வருடம்) - III

- பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய எழுத்தினை கூட்டில் எழுதுக)

சிங்களம் - S
தமிழ் - T [ ] (மொழி மூலத்தினை மாற்ற இடமளிக்கப்படாது)
ஆங்கிலம் - E

01 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) [ ]
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(உதா: H.M.S.K. GUNAWARDHANA)

[ ]

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) - [ ]

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்- [ ]

02 2.1 ஆண்/பெண் - [ ]

03 3.1 விவாகமானவர்/ விவாகமாகாதவர் - [ ]

3.2 பிறந்த திகதி - ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.05.10 ஆம் திகதிக்கு வயது

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

04 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) [ ]

நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) [ ]

4.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

i. சிங்களம்/தமிழில் - [ ]

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் - [ ]

4.3 பிரதேச செயலாளர் பிரிவு: [ ]

4.4 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம்: [ ]

4.5 மின்னஞ்சல் முகவரி : [ ]

4.6 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான | | | | | | | | | | |
| கைத்தொலைபேசி: | | | | | | | | | | |

❖ பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் மேற்படி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS முறை ஊடாக அனுப்பப்படும் என்பதால் பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுக. SMS செய்திகள் கிடைக்காமை தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் புகார்கள் பரிசீலிக்கப்படாது.

**05**. கல்வித் தகைமைகள் -

**5.1** கல்விப் பொது தராதர. (சாதாரண தர) பெறுபேறு விபரம்:

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் : | முதல் சந்தர்ப்பம் | |
| | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**5.2** கல்விப் பொது தராதர (உயர் தர) பெறுபேறுகள் :

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |

5.3 பரீட்சை அறிவித்தலில் 10 ஆம் பந்திக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள தொழிற்தகைமைகள் தொடர்பான பயிற்சிநெறி / தகைமை தொடர்பான விபரங்கள்:

I. பல்கலைக்கழகம் / நிறுவனம்:

II. பாடநெறியின்பெயர் :

III. காலம் :

IV. பாடநெறியை பூர்த்திசெய்த தினம் :

V. ஏனைய தகைமைகள் :

மேற்படி தகைமைளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்/ ஆவணங்களை இணைக்கவும்)

**06.** நீங்கள் எப்பொழுதேனும் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

**6.1** மேற்படி பதில் **"ஆம்"** எனில் விபரங்களைக் குறிப்பிடுக **:** ..........................................................................................
..........................................................................................................................................................................

**07.** பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் : ..............................................................................
..........................................................................................................................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் : .......................................................

திகதி : .......................................................

பற்றுச்சீட்டை UPLOAD செய்க

| | |
|---|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் | பற்றுச்சீட்டை upload செய்யக் கூடியவாறு தயாரிக்க |

(பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்ற மே.மா ١ மட்டும் செல்லுபடியாகும்.)

**08.** விண்ணப்பதாரியின் உறுதியுரை

..........................................................................................................................................................................
......................................... ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன். நான் வழங்கிய தகவல்கள் தவறானவை /பிழையானவை என தெரியவருமிடத்து மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எனது உரிமை புறக்கணிக்கப்படும் என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட நேரிடும் என்பதையும் அறிவேன். மேலும் நேர்முகப் பரீட்சை நடத்துதல் தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் என்பதையும் அறியத் தருகிறேன்.

திகதி ........................................ ........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**09.** விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி.......................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் அவர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தினார் எனவும் உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்...................................திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.............................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்................................................................
பதவி................ ......................................................................................
முகவரி ............................................................................................................
திகதி................................................................................................................

10. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலராயின் நிறுவனத் தலைவரின் அத்தாட்சி (அவசியமாயின் மட்டும் குறிப்பிடுக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................... இவ்வலுவலகத்தில்/ நிறுவனத்தில் .............................. திகதி முதல் இற்றை வரை .................................................. (பதவி) நிரந்தர /தற்காலிக/ அமைய (அவசியமற்ற சொற்களை கீறிடுக) பதவியில் கடமையாற்றும் அவரது சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்கு அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்................................................................
பதவி ..........................................................................................................
முகவரி ..............................................................................................................
திகதி................................................................................................................

04 - 32/2

---

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III பயிற்சி (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

01.மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கீழ்வரும் பதவிகளுக்காக மேல் மாகாணத்தில் தொடர்ச்சியான மூன்று வருட கால (03) வதிவினைக் கொண்ட கீழ்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த திறந்த ஆட்சேர்ப்புப் பரீட்சை மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

I. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III

II. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) (ஒரு வருட பயிற்சிக் காலம்)

III. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

**01. பொதுத் தகைமைகள்**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நடத்தை உடையவராக இருத்தல்.
iii. ஏதேனும் மதப்பிரிவின் மதகுருவாக உள்ள நபர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை அற்றவர் ஆவர்.
iv. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற◌்கு முன்னரான மூன்று (03) வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும்.
v. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த உரிய வயது எல்லைக்குட்பட்ட அலுவலர்கள் மட்டுமே சேவையில் இணைத்துக் கொள்வதற்குரிய எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையை உடையவர்களாக கருதப்படுவர்.
vi. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தமது கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள தகைமைகளை உடையவராக காணப்பட வேண்டும்.

**02. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அதாவது 2026.05.10 ஆம் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் அவசியம்.

**03. சேவை நிபந்தனைகள்**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையின் நியமனங்களில் அதிகாரம் செலுத்தும் நிபந்தனைகளுக்கும் 2020.02.26 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியர்வுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் 2364/32 ஆம் இலக்க 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்படவேண்டும்.

(இ) இப்பதவி மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டதாகும். தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்குள் (03) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கமைய பரிந்துரைக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**05. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 27**

**06. வெற்றிடங்கள் நிலவும் துறைகள் :**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

6.1 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.05.10 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளும் 2026.05.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

## 07. ஆட்சேர்ப்பு முறை

- எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமை உடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய தினத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பாக எவ்விதத்திலும் மீள கருத்திற் கொள்ளப்படாது. மேலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதன் பின்னர் முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

- உரிய திணைக்களம்/ அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள சதவிகிதத்திற்கு போதுமான அடிப்படைத் தகைமைகளுடன் கூடிய உள்வாரியான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து மட்டும் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

- பயிற்சிக் காலத்தின் முடிவில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

  (அ) திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் பயிற்சித் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

  (ஆ) பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மிகாது தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில் மீண்டும் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த அடிப்படையில் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

## 08. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :

- தரம் III MN 03 – 2025
  ரூ . 52,250 - 10 X 800 - 11X 1,190- 10 X 1,320 -10X1,350 - ரூபா 100,040.00
  (பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை III இன்படி கொடுப்பனவு செய்யப்படும்)

- பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்)- 2026.01.01 ஆம் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு ரூ 43,274.00

- பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) - 2026.01.01 ஆம் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு ரூ 43,730.00

(மாதாந்த கொடுப்பனவு பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை VI இன்படி கொடுப்பனவு செய்யப்படும்.

**09. அடிப்படைத் தகைமைகள் :**

| *பதவி* | *தகைமைகள்* |
|---|---|
| மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (இயந்திரவியல்)<br>➢ தரம் III | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப் பிரிவில் இரசாயனவியல். பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br><br>மற்றும்<br><br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>(ஆ) தொழிற் தகைமைகள்<br>1. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (இயந்திரவியல் ) டிப்ளோமா<br><br>அல்லது<br><br>2. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (இயந்திரவியல்)<br><br>அல்லது<br><br>3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (இயந்திரவியல்)<br>அல்லது<br>4. இலங்கை திறந்த பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (இயந்திரவியல்)<br>அல்லது<br><br>5.இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>6. தொழிற் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் கல்வித் தகைமை (NVQ) 06 ஆவது நிலைக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| ➢ பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>1.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் இயந்திரவியல் துறையில் 03 வருட கற்கை நெறியினை கற்று தேசிய தொழில்நுட்ப (இயந்திரவியல்) சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>2.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் இயந்திரவியல் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான 02 வருட தேசிய சான்றிதழ் கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>3.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| ➢ பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானம்/ கணிதப்பிரிவில் இரசாயனவியல். பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகியவற்றில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் விடயப் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய விடயங்களில் இரண்டு விடயங்கள் உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br>மற்றும்<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விடயத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

குறிப்பு

i) தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii) தரம் III இற்கு தகைமை உடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாத போது, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சித் தரத்திற்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி வழங்கும் தரத்திற்கு சேர்க்கப்படுவர்.

iii) பயிற்சித் தரம் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட பயிற்சிக் கால முடிவில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தரம் III இற்கு நியமிக்கும் போது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

**10. எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரம்**

❖ **பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சி) மற்றும் தரம் III இற்காக**

| *விடயம் மற்றும் விடயப் பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>அபேட்சகரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| வாகன இயந்திர உபகரணங்கள் பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்பு தொடர்பான உபாயங்கள், வாகனம் தொடர்புடைய தொகுதிகள் பற்றிய அறிவு, உலோக கைத்தொழில் மற்றும் உலோகங்களின் இயல்புகள் எஞ்சின்களை குளிரூட்டல் பற்றிய அறிவு, அளவீட்டு கருவிகள், இயந்திர கருவிகள், வெட்டும் ஆயுதங்கள் ஆகியவற்றின் பயன்பாடு படைப்பாற்றலுடனான இயந்திர மற்றும் இயந்திர வரைவு மற்றும் நகலெடுத்தல் தொடர்பாக விண்ணப்பதாரருக்கு காணப்படும் அறிவு மற்றும் திறன் தொடர்பாக தீர்மானிக்கும் வகையிலான வினாக்களை உள்ளடக்கியது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

❖ **பயிற்சியளித்தல் (இரண்டு வருட பயிற்சிக்காக)**

| *விடயம் மற்றும் விடயப் பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>விண்ணப்பதாரரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 02 மணித்தியாலம் | 100 | 40% |

11. பரீட்சைப் பெறுபேறுகள் :

மேல் மகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் www.psc.wp.gov.lk எனும் வலைத்தளத்தில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

12. பொதுவான நேர்முகப் பரீட்சை :
அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள் – அடிப்படைத் தகைமைகளை பரீட்சிக்கும் பொருட்டு மற்றும் உடற்தகுதி தொடர்பாக பரீட்சிக்கும் பொருட்டு நடத்தப்படும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**நியமிக்கும் அதிகாரி - மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

13. **பரீட்சைக் கட்டணம் :**
அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சைக்கான கட்டணமாக ரூ. 1200.00 ஐ மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட (மே.மா1) பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணமானது முத்திரை அல்லது காசுக்கட்டளையாக ஏற்கப்படாது.

14. விண்ணப்பிக்கும் முறை **:**

i. அனைத்து விண்ணப்பதாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து விண்ணப்பம்கோரும் அறிவித்தலின் படி எமது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள (Upload) விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம்.

ii. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

iii. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அரசாங்க சேவையில்உள்ளஅலுவலர்களின்கையொப்பம்உரியதிணைக்களத்தலைவர்அல்லதுஅவரால்அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி தரத்தின் அலுவலர் அல்லது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலகர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, ஏனைய மதங்களைச் சார்ந்த மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

iv. நிகழ் நிலை ஊடாக விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் திகதி – 2026.05.10

v. எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து நிகழ் நிலை ஊடாக 2026.05.10 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்.
மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
(ஆட்சேர்ப்புப் பிரிவு)
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026 " எனக் கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

vi. தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்கவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

vii. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது.

viii. இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். இந்த ஆட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/ செய்யாதிருத்தல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

ix. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணப்பத்தினை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது.

விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பத்தாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

15. **பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை இடம்பெறும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
*குறிப்பு* – விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருத்தலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராக கருதுவதாக அமையாது.

16. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**

பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத வகையிலும் மற்றும் இயந்திரவியல் தொடர்பு சாதனங்களை அணியாமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும் போது காதுகளை மறைக்காத வகையில் உடையணிந்து பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை ஆரம்பித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

17. **தவறான தகவல்கள் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரி ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு தகைமை அற்றவர் என அறியக் கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். மேலும் எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என அறியுமிடத்து அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

i. விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் தகைமையற்ற / பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அறியக்கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பதாரியால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவரால் சரியான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளமை பிற்காலத்தில் வெளிப்படுத்தப்படுமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு, இப்பரீட்சையின் மூலமாக வழங்கப்பட்ட நியமனம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் அவர் மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் உட்பட்டவராவார்.

18. பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் உட்பட்டவர்களாவர். குறித்த

விதிகளை மீறுமிடத்து அவர்கள் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்.

19. இப்ரீட்சையினை நடத்துதல், பரீட்சையினை இரத்துச் செய்தல் பிற்போடுதல், அல்லது பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இவ்விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பான பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்பட இணங்கியுள்ளனர்.

20. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்,

திலக் சௌரத்,
செயலாளர்,
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

தொலைபேசி - 011 2879614
தொலைநகல் - 011 2879512
மின்னஞ்சல் - ppscwprec@sltnet.lk

மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய,
2026, மார்ச் 27.

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் உள்ள எந்தவொரு விடயத்திற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு பொறுப்பேற்காது)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026**

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

அறிவித்தலின் இலக்கம் 1 இற்கமைய விண்ணப்பிக்கும் பதவிக்குரிய தரம் (உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதுக)

தரம் III - I
பயிற்சித் தரம் (ஒரு வருடம்) - II [ ] (தரத்தினை பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது)
பயிற்சித் தரம் (இரண்டு வருடம்) - III

- பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய எழுத்தினை கூட்டில் எழுதுக)

சிங்களம் - S
தமிழ் - T [ ] (மொழி மூலத்தினை மாற்ற இடமளிக்கப்படாது)
ஆங்கிலம் - E

01 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(உதா: H.M.S.K. GUNAWARDHANA)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) -

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் -

02 2.1 ஆண்/பெண் -

03 3.1 விவாகமானவர்/ விவாகமாகாதவர் -

3.2 பிறந்த திகதி : ஆண்டு மாதங்கள் திகதி

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.05.10 ஆம் திகதிக்கு வயது -

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

**04** 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்)

4.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

i. சிங்களம்/தமிழில் -

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் -

4.3 பிரதேச செயலாளர் பிரிவு:

4.4 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம்:

4.5 மின்னஞ்சல் முகவரி :

4.6 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான | | | | | | | | | | |
| கைத்தொலைபேசி: | | | | | | | | | | |

❖ பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் மேற்படி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS முறை ஊடாக அனுப்பப்படும் என்பதால் பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுக. SMS செய்திகள் கிடைக்காமை தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் புகார்கள் பரிசீலிக்கப்படாது.

**05**. கல்வித் தகைமைகள் -

**5.1** கல்விப் பொதுத் தராதர. (சாதாரண தர) பெறுபேறு விபரம்:

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் : | முதல் சந்தர்ப்பம் | |
| | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**5.2** கல்விப் பொது தராதர (உயர் தர) பெறுபேறுகள் :

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |

5.3 பரீட்சை அறிவித்தலில் 09 ஆம் பந்திக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள தொழிற்தகைமைகள் தொடர்பான பயிற்சிநெறி / தகைமை தொடர்பான விபரங்கள்:

I. பல்கலைக்கழகம் / நிறுவனம்:

II. பாடநெறியின்பெயர் :

III. காலம் :

IV. பாடநெறியை பூர்த்திசெய்த தினம் :

V. ஏனைய தகைமைகள் :

(மேற்படி தகைமைளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்/ ஆவணங்களை இணைக்கவும்)

**06.** நீங்கள் எப்பொழுதேனும் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

**6.1** மேற்படி பதில் **"ஆம்"** எனில் விபரங்களைக் குறிப்பிடுக **:** ..........................................................................................
..........................................................................................................................................................................

**07.** பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் : ..........................................................................................
..........................................................................................................................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் : .......................................................

திகதி : .......................................................

பற்றுச்சீட்டை UPLOAD செய்க

| | |
|---|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் | பற்றுச்சீட்டை upload செய்யக் கூடியவாறு தயாரிக்க |

(பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்ற மே.மா 1 மட்டும் செல்லுபடியாகும்.)

**08.** விண்ணப்பதாரியின் உறுதியுரை

……………………………………………………………………………………………………………………………………………………………
……………………………………… ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன். நான் வழங்கிய தகவல்கள் தவறானவை /பிழையானவை என தெரியவருமிடத்து மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்) தரம் III பயிற்சித்தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எனது உரிமை புறக்கணிக்கப்படும் என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட நேரிடும் என்பதையும் அறிவேன். மேலும் நேர்முகப் பரீட்சை நடத்துதல் தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் என்பதையும் அறியத் தருகிறேன்

திகதி ........................................ ........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பதாரி திரு/ திருமதி/ செல்வி......................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் அவர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தினார் எனவும் உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்...................................திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.............................................

கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

திகதி.............................................................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்...............................................................
பதவி................ ...........................................................................................
முகவரி ..........................................................................................................

**10. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலராயின் நிறுவனத் தலைவரின் அத்தாட்சி (அவசியமாயின் மட்டும் குறிப்பிடுக)**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ..................................................... இவ்வலுவலகத்தில்/ நிறுவனத்தில் .............................. திகதி முதல் இற்றை வரை ................................................... (பதவி) நிரந்தர /தற்காலிக/ அமைய (அவசியமற்ற சொற்களை கீறிடுக) பதவியில் கடமையாற்றும் அவரது சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்கு அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...............................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

திகதி.............................................................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்...............................................................
பதவி ......................................................................................................
முகவரி ..........................................................................................................

04 - 32/3

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2026

01. மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கீழ்வரும் பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ள தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

I. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III
II. மேல் மாகாண சபை அரச சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (ஒரு வருட பயிற்சிக் காலம்)
III. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

**02. பொது தகைமைகள்**

2.1 விண்ணப்பதாரியின் பதவி நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல்
2.2 உரிய திகதிக்கு மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் திணைக்களம் ஒன்றில் நிரந்தர பதவியொன்றின் அலுவலராக ஐந்து (05) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருப்பதோடு அது திணைக்களத் தலைவரால் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல்.
2.3 இலக்கம் 04/2021 மேல் மாகாண உள்ளூராட்சி சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படாதிருத்தல்.
2.4 விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த அலுவலர்கள் மட்டுமே சேவையில் இணைத்துக் கொள்வதற்குரிய எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை உடையவர்களாக கருதப்படுவர்.
2.5 விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தமது கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள தகைமைகளை உடையவராக காணப்பட வேண்டும்.

03. வயதெல்லை : தற்போது மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**04. சேவை நிபந்தனைகள்**

(அ) 2020.06.24 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியர்வுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட வேண்டும்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

(இ) இலங்கைச் சனநாயக சோசஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2364/32 மற்றும் 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகளுக்கும் சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்படவேண்டும்.

**05. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 73**

**06.வெற்றிடங்கள் நிலவும் துறைகள் :**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

6.1 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.05.10 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளும் 2026.05.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

**07. ஆட்சேர்ப்பு முறை**

- எழுத்துப் பரீட்சை மற்றும் மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் மொத்தப் புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய தினத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பாக எவ்விதத்திலும் மீள கருத்திற் கொள்ளப்படாது. மேலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதன் பின்னர் முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

- உரிய திணைக்களம்/ அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள சதவிகிதத்திற்கு போதுமான அடிப்படைத் தகைமைகளுடன் கூடிய உள்வாரியான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து மட்டும் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

- இப்பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்குமிடத்து அது தொடர்பாக கட்டாயமாக தமது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

- பயிற்சிக் காலத்தின் முடிவில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

  (அ) திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் பயிற்சித் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

  (ஆ) பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மிகாது தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில் மீண்டும் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த அடிப்படையில் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை இடை நிறுத்தப்படும்.

08. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:-

- தரம் III MN 03 – 2025
  ரூ. 52,250.00 - 10 X 800 - 11X 1,190- 10 X 1,320 -10X1,350 - ரூ.100,040.00
  (பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை III இன்படி கொடுப்பனவு செய்யப்படும்)

- பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்)- 2026.01.01 திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு
  ரூ 43,274.00

- பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்)-2026.01.01 திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு
  ரூ 43,730.00

(மாதாந்த கொடுப்பனவு பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை VI இன்படி கொடுப்பனவு செய்யப்படும்.)

09. அடிப்படைத் தகைமைகள் :

| பதவி | தகைமைகள் |
|---|---|
| மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் (சிவில்)<br>➢ தரம் III<br>(நேரடி ஆட்சேர்ப்பு) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>1. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப ( சிவில் ) டிப்ளோமா.<br>அல்லது<br>2. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>4.இலங்கைத் திறந்த பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>5.இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.<br>அல்லது<br>6. தொழிற் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் கல்வித் தகைமை (NVQ) 06 வது நிலைக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>7.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| | **(இ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது அதனிலும் உயர்ந்த சேவைப் பிரிவு ஒன்றில் நிரந்தரமான திணைக்களம் சார் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| ➢ பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>1.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் 03 வருட கற்கை நெறியினை கற்று தேசிய தொழில்நுட்ப (சிவில்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>2.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான 02 வருட தேசிய சான்றிதழ் கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>3.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |
| | அத்துடன்<br>உரிய துறையில் 05 வருட அனுபவம்<br><br>**(இ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது அதனிலும் உயர்ந்த சேவைப் பிரிவு ஒன்றில் நிரந்தரமான திணைக்களம் சார் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் |
| ➢ பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது அதனிலும் உயர்ந்த சேவைப் பிரிவு ஒன்றில் நிரந்தரமான திணைக்களம் சார் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் |

குறிப்பு

i) தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii) தரம் III இற்கு தகைமை உடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாத போது, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சித் தரத்திற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி வழங்கும் தரத்திற்கு சேர்க்கப்படுவர்.

iii) பயிற்சித் தரம் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட பயிற்சிக் கால முடிவில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தரம் III இற்கு நியமிக்கும் போது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

**10. எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரம்**

❖ பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சி) மற்றும் தரம் III இற்காக

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>விண்ணப்பதாரரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| **தொழில்நுட்பத் திறன்**<br>கட்டடம், வீதிகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டுமான அடிப்படைகள் நிர்மாணப் பணிகளுக்கான வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் வாசித்து அறியும் ஆற்றல். மதிப்பீடுகள் தயாரிக்கும் ஆற்றல், நீர்வழங்கல், நீர்வழித்தட செயற்பாடுகள் மற்றும் கழிவகற்றல் நடைமுறைகள் தொடர்பாக விண்ணப்பதாரருக்கு உள்ள ஆற்றல்கள் தொடர்பான விண்ணப்பதாரிகளின் திறன்களை மதிப்பிடுவதற்கான வினாக்களை உள்ளடக்கியது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

❖ **பயிற்சியளித்தல் (இரண்டு வருட பயிற்சிக்காக)**

| *விடயம் மற்றும் விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br>விண்ணப்பதாரியில் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள் முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 02 மணித்தியாலம் | 100 | 40% |

**11. பரீட்சைப் பெறுபேறுகள் :**

மேல் மகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் www.psc.wp.gov.lk எனும் வலைத்தளத்தில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

**12. பொதுவான நேர்முகப் பரீட்சை :**
அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள் – அடிப்படை தகைமைகளை பரீட்சிக்கும் பொருட்டு மற்றும் உடற்தகுதி தொடர்பாக பரீட்சிக்கும் பொருட்டு நடத்தப்படும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**நியமிக்கும் அதிகாரி - மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

13. பரீட்சைக் கட்டணம் :
அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சைக்கான கட்டணமாக ரூ 1200/- ஐ மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20 -03 -02 - 99 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட (மே.மா1) பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணமானது முத்திரை அல்லது காசுக்கட்டளையாக ஏற்கப்படாது.

**14. விண்ணப்பிக்கும் முறை :**

i. அனைத்து விண்ணப்பத்தாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து விண்ணப்பம்கோரும் அறிவித்தலின் படி எமது இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள (Upload) விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம்.

ii. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

iii. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்-
விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களின் கையொப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.

iv. நிகழ் நிலை ஊடாக விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் திகதி – 2026.05.10

v. எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து நிகழ் நிலை ஊடாக 2026.05.10 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதோடு சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய A4 கடதாசியில் இருபுறமும் அமையுமாறு தயாரித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தில் தெளிவாக நிரப்ப வேண்டும்.

vi. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்.
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
(ஆட்சேர்ப்புப் பிரிவு)
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்
நாவல வீதி,
ராஜகிரிய.

- விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2026 " எனக் கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

vii. தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதிப்பதால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்கவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

viii. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது.

ix. இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாது இருத்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும். இந்த ஆட்சேர்ப்பினை பிற்போடுதல், இரத்துச்செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/ செய்யாதிருத்தல் தொடர்பாக இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

x. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் விண்ணபத்தினை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்பட்டு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பதாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

**15. பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை இடம்பெறும் தினத்தில் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
*குறிப்பு* – விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருத்தலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராக கருதுவதாக அமையாது.

**16. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**

பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத வகையிலும் மற்றும் இலத்திரணியல் தொடர்பு சாதனங்களை அணியாமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும்போது காதுகளை மறைக்காத வகையில் உடையணிந்து பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை ஆரம்பித்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

**17. தவறான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரி ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு தகைமை அற்றவர் என அறியக் கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். மேலும் எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என அறியுமிடத்து அவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

i. விண்ணபப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரால் தகைமையற்ற / பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அறியக்கிடைக்குமிடத்து பரீட்சை இடம்பெற முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சை இடம்பெற்ற பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பதாரியால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவரால் சரியான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளமை பிற்காலத்தில் வெளிப்படுத்தப்படுமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு, இப்பரீட்சையின் மூலமாக வழங்கப்பட்ட நியமனம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் அவர் மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் உட்பட்டவராவார்.

**18.** பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் உட்பட்டவர்களாவர் குறித்த விதிகளை மீறுமிடத்து அவர்கள் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்.

**19.** இப்பரீட்சையினை நடத்துதல், பரீட்சையினை இரத்துச் செய்தல் பிற்போடுதல் அல்லது பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இவ்விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பான பொதுவான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்பட இணங்கியுள்ளனர்.

**19.** இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை

ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில்,

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆவது மாடி,
ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி,
ராஜகிரிய.
2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதி

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் உள்ள எந்தவொரு விடயத்திற்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு பொறுப்பேற்காது)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026**

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

அறிவித்தலின் இலக்கம் 1 இற்கமைய விண்ணப்பிக்கும் பதவிக்குரிய தரம் (உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதுக)

தரம் III - I

பயிற்சித் தரம் (ஒரு வருடம்) - II [ ] (தரத்தினை பின்னர் மாற்ற இடமளிக்கப்படாது)

பயிற்சித் தரம் (இரண்டு வருடம்) - III

- அங்கவீனமுற்றவரா? [ ] (ஆம் எனில் ✓ அடையாளமிடுக)
- பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய எழுத்தினை கூட்டில் எழுதுக)

சிங்களம் - S
தமிழ் - T ☐ (மொழி மூலத்தினை மாற்ற இடமளிக்கப்படாது)
ஆங்கிலம் - E

01 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ☐
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(உதா: H.M.S.K. GUNAWARDHANA)
☐

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) - ☐

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் - ☐

02 2.1 ஆண்/பெண் - ☐

03 3.1 விவாகமானவர்/ விவாகமாகாதவர் - ☐

3.2 பிறந்த திகதி - ஆண்டு : ☐ மாதம் : ☐ திகதி : ☐

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.05.10 ஆம் திகதிக்கு வயது

வருடங்கள் : ☐ மாதங்கள் : ☐ நாட்கள் : ☐

**04** 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ☐

நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) ☐

4.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

i. சிங்களம்/தமிழில் - ☐

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் - ☐

4.3 பிரதேச செயலாளர் பிரிவு: ☐

4.4 மேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக வசிக்கும் காலம்: ☐

4.5 மின்னஞ்சல் முகவரி : ☐

4.6 தொலைபேசி இலக்கம் :

நிலையான :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

கைத்தொலைபேசி:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

❖ பரீட்சை தொடர்பான அனைத்து தகவல்களும் மேற்படி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS முறை ஊடாக அனுப்பப்படும் என்பதால் பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுக. SMS செய்திகள் கிடைக்காமை தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படும் புகார்கள் பரிசீலிக்கப்படாது.

**05**.

5.1 மேல் மாகாண அரசாங்க சேவையில் தற்போது வகிக்கும் பதவி ☐

5.2 அப்பதவியில் நிரந்தரப்படுத்திய திகதி ☐
(பதவி நிரந்தரப்படுத்தல் கடிதத்தின் சான்றுப்படுத்திய பிரதியை இணைக்க)

5.3 விண்ணப்பம் கோரும் திகதிக்கு மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் திணைக்களம் சார் நிரந்தரப் பதவி ஒன்றின் அலுவலராக 05 வருட தொடர்ச்சியான திருப்தியான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளீரா? ☐

5.4 இலக்க 04/2021 மேல் மாகாண உள்ளூராட்சி சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்று தண்டனை பெற்றுள்ளமை பெறாமை? ☐

**06**. **அனுபவம்** - (பதவியுடன் தொடர்புடைய துறையில் 05/10 வருட அனுபவம்) ................
(அத்தாட்சிப்படுத்தும் சேவை சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)

**07**. **கல்வித் தகைமைகள் -** (விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் இலக்கம் 09 இன் படி விண்ணப்பிக்கும் பதவிக்குரிய தகைமைகள் குறிப்பிடப்பட வேண்டும் என்பதோடு அதன் நிழற் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் )

**07.1** கல்விப் பொது தராதர. (சாதாரண தர) பெறுபேறு விபரம்:

| | | |
|---|---|---|
| i. பரீட்சை இடம் பெற்ற வருடம் மற்றும் மாதம் : | முதல் சந்தர்ப்பம் | |
| | | |
| ii. சுட்டெண் | | |
| iii. பெறுபேறு | பாடம் | பெற்ற தேர்ச்சி |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

07.2 விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் 09 ஆம் பந்திக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு நீங்கள் பெற்றுள்ள தொழிற்தகைமைகள் தொடர்பான பயிற்சி நெறி/தகைமை தொடர்பான விபரங்கள் :

I. பல்கலைக்கழகம் / நிறுவனம்: ☐

II. பாடநெறியின்பெயர் : ☐

III. காலம் : ☐

IV. பாடநெறியை பூர்த்திசெய்த தினம் : ☐

V. ஏனைய தகைமைகள் : ☐

(மேற்படி தகைமைளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்/ ஆவணங்களை இணைக்கவும்)

**08.** பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் : ..............................................................................................
...........................................................................................................................................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் : .......................................................

திகதி : .......................................................

பற்றுச்சீட்டை UPLOAD செய்க

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும் | பற்றுச்சீட்டை upload செய்யக் கூடியவாறு தயாரிக்க |
|---|---|

(பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெற்ற மே.மா 1 மட்டும் செல்லுபடியாகும்.)

**09.** விண்ணப்பதாரியின் உறுதியுரை

...........................................................................................................................................................................................
............................................ ஆகிய என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன். நான் வழங்கிய தகவல்கள் தவறானவை /பிழையானவை என தெரியவருமிடத்து மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் III பயிற்சித்தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எனது உரிமை புறக்கணிக்கப்படும் என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட நேரிடும் என்பதையும் அறிவேன். மேலும் நேர்முகப் பரீட்சை நடத்துதல் தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் என்பதையும் அறியத் தருகிறேன்.

திகதி ........................................ ........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் அத்தாட்சி

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு. / திருமதி/ செல்வி ...................................................... இவ்வலுவலகத்தில்/ நிறுவனத்தில் .............................. திகதி முதல் இற்றை வரை ................................................... (பதவி) நிரந்தர /தற்காலிக/ அமைய (அவசியமற்ற சொற்ககளை கீறிடுக) பதவியில் கடமையாற்றும் அவரது சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்கு அவர் தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேற்படி தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...............................................................
திணைக்களத் தலைவரின் ஒப்பம்
மற்றும் பதவி முத்திரை

திகதி...........................................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்................................................................
பதவி ......................................................................................................
முகவரி ......................................................................................................

11. பிரதான செயலாளர் (மே.மா)/ அமைச்சு செயலாளரின் பரிந்துரை மேற்படி பரிந்துரையுடன் உடன்படுகின்றேன்/ உடன்படவில்லை.

திகதி ........................................ ........................................
பிரதான செயலாளர் (மே.மா.)/ அமைச்சு செயலாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

01. மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் கீழ்வரும் பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ள தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் தினம் ஒன்றில் நடத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

I. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) தரம் III
II. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) (ஒரு வருட பயிற்சிக் காலம்)_
III. மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்) (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

**02. பொது தகைமைகள்**

2.1 விண்ணப்பதாரியின் பதவி நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

2.2 உரிய திகதிக்கு மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் திணைக்களம் ஒன்றில் நிரந்தர பதவியொன்றின் அலுவலராக ஐந்து (05) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருப்பதோடு அது திணைக்களத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல்

2.3 இலக்கம் 04/2021 மேல் மாகாண உள்ளூராட்சி சுற்று நிரூபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

2.4 விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து வகையிலும் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த அலுவலர்கள் மட்டுமே சேவையில் இணைத்துக் கொள்வதற்குரிய எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையுடையவர்களாக கருதப்படுவர்.

2.5 விண்ணப்பதாரி மேல் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தமது கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள தகைமைகளை உடையவராக காணப்பட வேண்டும்.

03. வயதெல்லை:- தற்போது மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**04. சேவை நிபந்தனைகள்**

(அ) 2019.08.15 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப அலுவலர் (மின்) பதவிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவியர்வுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட வேண்டும்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

(இ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2364/32 மற்றும் 2023.12.29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகளுக்கும் சுற்றுநிரூபங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்படவேண்டும்.

**05.** **வெற்றிடங்களின் எண்ணிக்கை : 09**

**06.வெற்றிடங்கள் நிலவும் துறைகள் :**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

6.1 விண்ணப்ப முடிவுத் திகதி 2026.05.10 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளும் 2026.05.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

07. ஆட்சேர்ப்பு முறை

- எழுத்துப் பரீட்சை மற்றும் மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் மொத்தப் புள்ளிகளின் தகைமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய தினத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பாக எவ்விதத்திலும் மீள கருத்திற் கொள்ளப்படாது. மேலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதன் பின்னர் முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது. ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியமனம் வழங்கப்படும் போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய சமமான புள்ளிகள் பெற்ற பல விண்ணப்பதாரிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மீண்டும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் திறமைகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

- உரிய திணைக்களம்/ அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள சதவிகிதத்திற்கு போதுமான அடிப்படைத் தகைமைகளுடன் கூடிய உள்வாரியான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து மட்டும் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்யப்படும்.

- பயிற்சிக் காலத்தின் முடிவில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்
  - (அ) திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் பயிற்சித் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் மேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

  - (ஆ) பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறத் தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதங்களுக்கு மிகாது தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில் மீண்டும் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த அடிப்படையில் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை இடை நிறுத்தப்படும்.

08. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் **:**

- தரம் III MN 03 – 2025
  ரூ. 52,250.00 - 10 X 800 - 11X 1,190- 10 X 1,320 -10X1,350 - ரூ. 100,040.00
  (பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை III இன்படி கொடுப்பனவு செய்யப்படும்)

- பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்)- 2026.01.01 ஆந் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு
  ரூ. 43,274.00

- பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்)-2026.01.01 ஆந் திகதிக்கு மாதாந்த கொடுப்பனவு
  ரூ. 43,730.00
  (மாதாந்த கொடுப்பனவு பொ.நி.சு 10/2025 இன் அட்டவணை VI இன்படி கொடுப்பனவு செய்யப்படும்.)

09. அடிப்படைத் தகைமைகள் :

| பதவி | தகைமைகள் |
|---|---|
| மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (மின்)<br>➢ தரம் III<br>(நேரடி ஆட்சேர்ப்பு) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>1. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிநுட்ப (மின் ) டிப்ளோமா<br>அல்லது<br>2. தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>4.இலங்கை திறந்த பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (மின்)<br>அல்லது<br>5. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்<br>அல்லது<br>6. தொழிற் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற் கல்வித் தகைமை (NVQ) 06 வது நிலைக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br><br>**(இ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது உயர் சேவைப் பிரிவில் நிரந்தரமான திணைக்களம் சார் பதவி ஒன்றில் உரிய துறையில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல். |

| | |
|---|---|
| ➢ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) தொழிற் தகைமைகள்**<br>01.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிநுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் 03 வருட கற்கை நெறியினை கற்று தேசிய தொழிநுட்ப (மின்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>02.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிநுட்பக் கல்லூரி ஒன்றில் சிவில் துறையில் கைத்தொழில் தொழிநுட்பத்திற்கான 02 வருட தேசிய சான்றிதழ் கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>03.உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழிநுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்படி தொழிநுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்<br><br>அத்துடன்<br>உரிய துறையில் 05 வருட அனுபவம்<br><br>**(இ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது உயர் சேவைப் பிரிவில் நிரந்தரமான, திணைக்களம் சார் பதவி ஒன்றில் உரிய துறையில் குறைந்த பட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் |
| ➢ பயிற்சி தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | **(அ) கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>**(ஆ) அனுபவம்**<br>மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் ஆரம்ப அல்லது உயர் சேவைப் பிரிவில் நிரந்தரமான, திணைக்களம் சார் பதவி ஒன்றில் உரிய துறையில் குறைந்தகபட்சம் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல். |

*குறிப்பு :*

i) தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சி தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

ii) தரம் III இற்கு தகைமை உடைய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாத போது, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சி தரத்திற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி வழங்கும் தரத்திற்கு சேர்க்கப்படுவர்.

iii) பயிற்சி தரம் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட பயிற்சிக் கால முடிவில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தரம் III இற்கு நியமிக்கும் போது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

10. எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரம்

❖ பயிற்சி தரம் (ஒரு வருட பயிற்சி) மற்றும் தரம் III இற்காக

| விடயம் மற்றும் விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| **நுண்ணறிவுப் பரீட்சை**<br><br>அபேட்சகரின் தர்க்கிக்கும் ஆற்றல், பகுப்பாய்வு நிலைகள், முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| **விடயம் தொடர்பான தொழிநுட்பத் திறன்**<br><br>*மின் தடையிகள், *மின்தேக்கிகள், *டையோடுகள் தொடர்பான கோட்பாடுகள் மின்னியல் மற்றும் மின்காந்த கோட்பாடுகள் மின் காந்தப் புலங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின் விருத்தி, எளிய கடத்தி அமைப்புகள் மின்தேக்கத்திறன் மற்றும் மின் தூண்டல், மின்காந்த மாதிரிகளில் தூண்டப்பட்ட மின்னியக்க விசை, ஒற்றை மின் மாற்றிகளின் அடிப்படைக் கோட்பாடுகள் சுற்று மற்றும் திசையன் வரைபடங்கள், எளிய மின்னோட்டத் தொடர்கள், கூட்டு மின் பிறப்பாக்கிகள் மற்றும் மோட்டார்களின் அடிப்படை இயக்கப் பண்புகள், ஆர்மேச்சர் எதிர் விளைவுகள் மற்றும் மின் கசிவு எதிர் விளைவு, மோட்டாரைத் தொடங்கும் கோட்பாடுகள் இணைச் செயற்பாட்டு மின் மாற்றிகள் மற்றும் மின்னாக்கி பின்னூட்ட ஒத்திசைவு ஆகியவை இதில் அடங்கும்<br><br>*மின்னிணைப்பு வழங்குதல் (ஒற்றைக் கட்டம் மற்றும் மூன்று கட்டம்)<br>*மின் கட்டமைப்பின் பாதுகாப்பு முறைகள்<br>*செயல் திறன் மற்றும் ஆற்றல் செயல் திறன் பற்றிய விடயங்களைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

❖ பயிற்சியளித்தல் (இரண்டு வருட பயிற்சிக்காக)

| விடயம் மற்றும் விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
